# சொற்சரம்: சமூகங்களை என்றென்றும் ஒன்றிணைக்கும் மொழிபெயர்ப்பு

தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் 10ஆம் ஆண்டுநிறைவு

© 2024
**தேசிய மொழிபெயர்ப்புக் குழு**

அனைத்து உரிமைகளும் உரித்தாகுக.

வெளியீட்டாளரின் எழுத்துபூர்வ அனுமதியின்றி இப்படைப்பின் எந்தவொரு பகுதியும், எவ்வகையிலும் புதுப்பிக்கப்படவோ, விநியோகிக்கப்படவோ, பகிரப்படவோ கூடாது – பிறவகை மின்னியல் அல்லது இயந்திரவியல் முறைகள் உள்பட; விமர்சனத் திறனாய்வுகளில் பொதிந்துள்ள சிற்றளவிலான மேற்கோள்கள், பதிப்புரிமைச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வர்த்தகம் சாரா பயன்பாடுகள் ஆகியவை தவிர.

ISBN: 978-981-94-1186-3

**வடிவமைப்பு**
aaah.studio

**பனுவல்**
In Plain Words

02 முகவுரை
அமைச்சர் ஜோஸஃபின் டியோ

04 வாழ்த்துச் செய்தி
மூத்த துணையமைச்சர் டான் கியெட் ஹவ்

06 பன்மொழி, ஒரு குரல்

18 வேகமாக, சிறப்பாக, ஒன்றாக

37 வருங்காலத்தில் மொழிபெயர்ப்பு

45 நன்றி நவில்தல்

# முகவுரை

மொழிபெயர்ப்பானது தொன்றுதொட்டு அதிக நேரமும் முயற்சியும் தேவைப்படும் ஒரு செயல்முறையாக இருந்து வந்துள்ளது. மொழிபெயர்ப்பாளரின் மொழியாற்றல், பொது அறிவு, பண்பாட்டுப் புரிந்துணர்வு, ஆய்வுத்திறன் ஆகியவற்றை அது பெருமளவு சார்ந்திருந்தது. இன்று மொழிபெயர்ப்புச் சூழல் எண்ணவியலாத அளவுக்கு உருமாறியுள்ளது. கணினி உதவியுடன் செயல்படும் மொழிபெயர்ப்புக் கருவிகள், இயந்திர மொழிபெயர்ப்புக் கருவிகள், செயற்கை நுண்ணறிவு ஆகியவையே அதற்குக் காரணம். இந்தப் புத்தாக்கங்கள் செயல்திறனையும் துல்லியத்தையும் மேம்படுத்தியுள்ளன. அத்துடன் மொழிபெயர்ப்பு நடைமுறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி, மொழிகளுக்கு இடையிலான தொடர்புமுறைக்குப் புதிய பாதையை வகுத்துள்ளன.

இருப்பினும் தொழில்நுட்பத்தால் மொழிபெயர்ப்புத் துறை உருமாறும் அதே வேளையில் மனிதர்களின் பங்கு ஈடுசெய்ய முடியாத வகையில் நீடித்திருக்கிறது. தொழில்நுட்பம், மொழிபெயர்ப்புச் செயல்முறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு ஆக்கத்தைக் குறிக்கின்றனவே அன்றி, நீக்கத்தை முன்னிறுத்தவில்லை. அதனைப் புரிந்துகொண்டு தேசிய மொழிபெயர்ப்புக் குழு (NTC) ‘எஸ்ஜி மொழிபெயர்ப்பு’ எனும் மொழிபெயர்ப்பு இயந்திரத்தை உள்ளூர்ச் சூழலுக்கு ஏற்ப உருவாக்கியுள்ளது. ‘எஸ்ஜி மொழிபெயர்ப்பு’ கொவிட்-19 பெருந்தொற்றின்போது பயன்மிக்க ஒன்றாக இருந்தது. சுகாதார ஆலோசனைகள் அனைத்துச் சமூகங்களையும் சென்றடைவதை உறுதிசெய்து, நெருக்கடியை நாம் சேர்ந்து சமாளிக்க அது துணைநின்றது.

மொழிபெயர்ப்பின் பங்கும் கருவிகளும் தொடர்ந்து மாற்றம் காணும் என நாம் எதிர்பார்க்கலாம். பெரிய மொழி மாதிரிகளும் ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவுக் கருவிகளும் தொழில்துறைகளிலும் வேலையின் தன்மையிலும் உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். சிங்கப்பூரைப் பொறுத்தவரை, கடந்த பத்தாண்டில் மேற்கொள்ளப்பட்ட அடிநிலை முயற்சிகளை அடியொற்றி, நாம் 'Smart Nation 2.0' எனும் அறிவார்ந்த தேசத் திட்டத்தைத் துவங்கியிருக்கிறோம். குடிமக்களின் வாழ்க்கையைத் தொடர்ந்து மேம்படுத்தவும் நமது பன்மொழிச் சமுதாயத்துக்குத் திறம்படச் சேவையாற்றவும் நாம் தொடர்ந்து ஈடுகொடுக்கவேண்டும்; தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவேண்டும். நமது வரையறைகளை மாற்றியமைத்து, புதிய தொடர்புகளை உருவாக்கி, உறுதியோடும் தேடல் வேட்கையோடும் புதிய களங்களை ஆராய்ந்தறிய தேசிய மொழிபெயர்ப்புக் குழுவையும் உள்ளூர் மொழிபெயர்ப்புச் சமூகத்தையும் நான் ஊக்குவிக்கிறேன்.

பத்தாண்டு நிறைவைக் கொண்டாடும் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவிற்கு வாழ்த்துகள். மேலும் இணைப்பு மிகுந்த, அனைவரையும் உள்ளடக்கிய சிங்கப்பூரை உருவாக்க நாம் சேர்ந்து செயல்படும் அதேவேளையில், தேசிய மொழிபெயர்ப்புக் குழு இன்னும் பல்லாண்டு காலத்திற்கு, மொழிபெயர்ப்பில் உன்னதநிலையைக் கொண்டிருக்கவேண்டும் என்பதே என்னுடைய அவா.



**ஜோஸஃபின் டியோ**
தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சர்
இரண்டாம் உள்துறை அமைச்சர்

# வாழ்த்துச் செய்தி

சிங்கப்பூர் போன்ற பல்லின, பன்மொழிச் சமுதாயத்தில் மொழிபெயர்ப்பு என்பது வார்த்தைகளின் மொழிமாற்றம் மட்டுமல்ல. சமூகங்களை இணைத்தல், பரஸ்பரப் புரிந்துணர்வை வளர்த்தல், பண்பாட்டுச் சிறப்பை ஆழப்படுத்துதல் ஆகியன பற்றியதே மொழிபெயர்ப்பு. சிங்கப்பூரர் என்ற நமது அடையாளத்தின் ஒரு பகுதியாகப் பன்மொழித்தன்மையை நாம் ஒன்றுசேர்ந்து பாதுகாக்க அது முக்கியம். 2014இல் தொடங்கப்பட்டது முதல் தேசிய மொழிபெயர்ப்புக் குழு நமது நான்கு அதிகாரத்துவ மொழிகளின் மொழிபெயர்ப்புத் தரங்களை உயர்த்தி, நமது அரசாங்கத் தொடர்புமுறைகளை மேம்படுத்தப் பங்காற்றியுள்ளது.

2024இல் நாம் நமது பத்தாண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், தேசிய மொழிபெயர்ப்புக் குழு அரசாங்க, தனியார், மக்கள் துறைகளை ஈடுபடுத்தி, அதன் தாக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது. ‘மொழிபெயர்ப்பில் குடிமக்கள்’ திட்டப்பணி, ‘மொழிபெயர்ப்பில் சமூகம்’ நிகழ்ச்சி மானியம், மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டுத் திட்டம், தகவல் சேவை (மொழிபெயர்ப்பு) உபகாரச் சம்பளம் போன்ற நமது திட்டங்கள் உள்ளூர் மொழிபெயர்ப்புத் திறனாளர்களை வளர்க்கவும் நமது அன்றாடக் கலந்துறவாடல்கள், தகவல் பரிமாற்றங்கள் ஆகியவற்றில் மொழிபெயர்ப்பைப் புகுத்தவும் நோக்கம் கொண்டுள்ளன. நமது ‘எஸ்ஜி மொழிபெயர்ப்பு’ இயந்திரம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிங்கப்பூரின் தனித்துவமான மொழித் தேவைகளை ஈடுசெய்வதற்கான மற்றொரு வழி.

வருங்காலத்தில், தேசிய மொழிபெயர்ப்புக் குழு மூன்று முக்கிய உத்திகளில் கவனம் செலுத்தும். மொழிபெயர்ப்புத் தரத்தை மேம்படுத்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், உள்ளூர்த் திறனாளர்களைத் தொடர்ந்து உருவாக்குதல், குறிப்பாக நமது இளையரிடையே சமூக ஈடுபாட்டை ஆழப்படுத்துதல் ஆகியவையே அவை. நமது பங்காளிகளுடன் இணைந்து துடிப்புமிக்க மொழிபெயர்ப்புச் சூழலை உருவாக்குவதன்வழி, இனிவரும் பல ஆண்டுகளுக்கு இருமொழி ஆற்றலை வலுப்படுத்தவும் சிங்கப்பூரின் மொழி, பண்பாட்டுச் சூழலை வளப்படுத்தவும் நாங்கள் விரும்புகிறோம்.

இந்த நினைவுப் புத்தகம் நம் பங்காளிகளின் பங்களிப்பையும் நமது சாதனைகளையும் கொண்டாடும் அதேவேளையில், சிங்கப்பூரின் மொழிபெயர்ப்புச் சூழலை நிர்மாணிக்க, மேலும் பலரை எங்களுடன் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றது. தேசிய மொழிபெயர்ப்புக் குழுவுக்கும் அதன் முயற்சிகளுக்கு ஏதாவது ஒரு வகையில் பங்காற்றிய அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான பத்தாண்டு நிறைவு நல்வாழ்த்துகள்!



**டான் கியெட் ஹவ்**
தலைவர், தேசிய மொழிபெயர்ப்புக் குழு
மூத்த துணை அமைச்சர்,
தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சு & தேசிய வளர்ச்சி அமைச்சு

# பன்மொழி, ஒரு குரல்

சிங்கப்பூர் நெடுங்காலமாகவே பலவிதமான மக்களுக்கும் மொழிகளுக்கும் இல்லமாக இருந்து வந்துள்ளது. அதனால் மொழிபெயர்ப்புக்குத் தேவையும் எழுந்தது. ஒரு தேசமாக உருவானதிலிருந்து உலக அளவில் தனித்துக்காட்டும் ஒரு பன்முகப் பண்பாட்டு அடையாளத்தை வளர்க்கும் அதேநேரத்தில், அதன் சமூகங்களை ஒன்றிணைக்க, மொழிபெயர்ப்பு இன்றியமையாத ஒன்றாக மாறியது.

“ஒரு கோப்பி ஓ கோசோங்!”

ஒரு குவளை காப்பி வாங்குவதிலிருந்து செய்திகளைப் படைப்பது வரை சிங்கப்பூரின் அன்றாட வாழ்க்கையில் பற்பல மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் ஆகிய அதிகாரத்துவ மொழிகளை மக்கள் மாறி மாறிப் பயன்படுத்துவதை இங்கு சாதாரணமாகக் காணலாம் – அல்லது அவற்றைக் கலந்து – மற்றவர்களுடன் உரையாடுவதைப் பார்க்கலாம். இத்தகைய தனித்தன்மை நமது மரபணுவில் ஒன்றரக் கலந்துள்ளது.

இதன் வரலாறு 700 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொடங்குகிறது. அப்போது இந்தத் தீவு தழைத்தோங்கும் ஒரு துறைமுக நகரமாக இருந்ததால் இந்த வட்டாரத்தையும் இதர பகுதிகளையும் சேர்ந்த மக்களைக் கவர்ந்திழுத்தது. பிரிட்டிஷ்காரர்கள் 19ஆம் நூற்றாண்டில் சிங்கப்பூரைத் தடையற்ற துறைமுகமாக உருவாக்கிய பின்னர், இன்னும் அதிகமான வணிகர்கள், வர்த்தகர்கள், தொழிலாளர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து இங்கு வந்தனர். கூடவே தங்களுடைய பல்வேறு பண்பாடுகளையும் மொழிகளையும் கொண்டுவந்தனர். இது பல மொழிகளைக் கொண்ட சமுதாயமாக சிங்கப்பூர் உருவெடுக்க வழிவகுத்தது.

சிங்கப்பூர் 1950களிலிருந்து சுதந்திரத்தை நோக்கி நடைபோட்டபோது இத்தகைய பன்மொழித்திறன் அதன் தன்மையைப் பறைசாற்றும் ஓர் அம்சமாக மாறியது. முதலமைச்சர் டேவிட் மார்ஷல் தலைமையிலான முதல் சட்டமன்றம் ஆங்கிலம், மலாய், மாண்டரின், தமிழ் மொழிகளில் அதன் விவாதங்களை நடத்தியது. நான்கு முக்கிய இனக்குழுக்களைப் பிரதிநிதித்த இந்த மொழிகள் பின்னர் அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டன.

சிங்கப்பூர் 1965ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பிறகு, அரசாங்கம் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றியது. இதன்வழி அதன் குடிமக்கள் தங்கள் பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதோடு உலகுடன் தொடர்புகொள்ளவும் இயலும். ஆங்கிலம் நிர்வாகத்திற்கும் கற்பித்தலுக்கும் வணிகத்திற்கும் பயன்படும் மொழியாக மாறியது. அதேநேரத்தில் தாய்மொழிகள் மக்களை அவர்களின் இன அடையாளங்களுடன் இணைத்தன.

**“ஒவ்வொருவரிடமும் இயல்பாகச் சில அம்சங்கள் இருக்கும் - அவரது பண்பாடு, அவரது மொழி, அவரது கடந்தகாலத் தொடர்பு, அவரது பாரம்பரியம். ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒன்று சேர்க்கப்பட்டது. அவர்கள் சந்திக்கவும், பேசவும், புரிந்துகொள்ளவும், ஒரே விஷயங்களைப் பார்த்துச் சிரிக்கவும், அதே விஷயங்களால் வேதனைப்படவும், கலங்கவும். இறுதியில் ஒரே சமூகத்தில் ஒன்றிணையவும் முடியும்.”**

—

லீ குவான் யூ, சிங்கப்பூரின் முதல் பிரதமர்,
1966இல் இருமொழி சிங்கப்பூர் பற்றி அவர் வெளியிட்ட கண்ணோட்டம்.



தகவல், கலை அமைச்சுத் தொகுப்பு, நிழற்படம்
- சிங்கப்பூர்த் தேசிய ஆவணக் காப்பகம்

லீ செங் கியாப் 1969 முதல் 1980 வரை அரசாங்கத்தின் மொழிபெயர்ப்புச் சேவைகளை மேற்பார்வையிட்டார்.

NATIONAL TRANSLATION COMMITTEE
தேசிய மொழிபெயர்ப்புக் குழு

தேசிய மொழிபெயர்ப்புக்குழுவின் சின்னம்

வெவ்வேறு மொழிகளைக் குறிக்கும் இரண்டு ‘L’ ஒரு சதுர வடிவத்தில் ஒன்றிணைந்து மக்கள், அரசாங்க, தனியார் துறைகளுக்கிடையில் ஒத்துழைப்பைக் குறிக்கின்றன. சிவப்பும் பச்சையும் அப்போதைய தொடர்பு, தகவல் அமைச்சின் நிறுவன வண்ணங்களாகும்.

## ஆரம்பகால அரசாங்க மொழிபெயர்ப்புச் சேவைகள்

பன்மொழிச் சமூகம் எனும்போது அங்கு மொழிபெயர்ப்புக்குத் தேவை எழுகிறது. தகவல்களைப் பெறுவதற்கு மொழி ஒரு தடையாக இருக்கக் கூடாது. குறிப்பாக, நிர்வாகத்திற்குப் பயன்படும் ஆங்கில மொழிக்கும் தாய்மொழிகளுக்கும் இடையே செய்யப்படும் மொழிபெயர்ப்புகளில் இது மிகவும் உண்மை. அரசாங்கத்தின் முக்கியத் தகவல்கள் பொதுமக்களிடம் சரியான முறையில் சென்றடைவதை உறுதிசெய்வதற்கு இது அவசியம்.

அரசாங்கச் செய்திகளின் மொழிபெயர்ப்புகளை மேற்பார்வையிடும் பணியை முதன்முதலில் கலாசார அமைச்சின் அப்போதைய மொழிபெயர்ப்புச் சேவைப் பிரிவின் தலைவர் லீ செங் கியாப் வழிநடத்தினார்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, பொதுச்சேவையில் மொழிபெயர்ப்பின் தரத்தையும் அது ஒரேமாதிரியாக இருப்பதையும் உறுதிசெய்வதற்கான அவசரத் தேவையை அரசாங்கம் உணர்ந்தது. அரசாங்கம் முழுமைக்குமான மொழிபெயர்ப்புத் திறன்களை மேம்படுத்தவும், மொழிபெயர்ப்பில் ஆழ்ந்த அக்கறை கொண்ட சமூகத்தை ஈடுபடுத்தவும், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாதவர்கள் உட்பட அனைத்துச் சிங்கப்பூரர்களுடனும் திறம்படத் தொடர்புகொள்வதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டவும் அப்போதைய தொடர்பு, தகவல் அமைச்சு (MCI) தேசிய மொழிபெயர்ப்புக் குழுவை (NTC) 2014 மார்ச் 1-ஆம் தேதி நிறுவியது. இன்று அந்தப் பணியைத் தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சின்கீழ் உள்ள மொழிபெயர்ப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## சமூகத்துடன் இணைந்து தரத்தை உயர்த்துதல்

தேசிய மொழிபெயர்ப்புக் குழுவை (NTC) ஆரம்பத்தில் அப்போதைய தொடர்பு, தகவல் துணையமைச்சர் சிம் ஆன் வழிநடத்தினார். அவருடன் ஊடகத்துறையினர், கல்வியாளர்கள், மொழிபெயர்ப்புத்துறை உறுப்பினர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் இணைந்தனர். இக்குழு ஒன்றிணைந்து, அரசாங்கத்தில் மொழிபெயர்ப்புத் தரத்தை உயர்த்த பின்வரும் வழிகளில் முயன்றது:

1. சிங்கப்பூருக்கே உரிய பண்பாட்டு மரபைப் பாதுகாத்து, பன்முகத்தன்மையை ஊக்குவித்தல்

2. பண்பாட்டு நுட்பங்களையும் கண்ணோட்டங்களையும் புரிந்துகொள்வதன்மூலம் சமூகங்களுக்கிடையில் உள்ள தடைகளை நீக்குதல்

3. ஆங்கிலப் புலமை இல்லாதவர்கள் அல்லது தங்கள் தாய்மொழியில் விவரங்களைப் பெற விரும்புவோர் உள்ளிட்ட அனைவருக்கும் அரசாங்கத் தகவல்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்

4. அதிகாரத்துவத் தகவல்களை எல்லாச் சமூகங்களுக்கும் சரியாக வழங்குவதன்மூலம் தவறான தகவல்களைத் தடுத்தல்

5. குடியுரிமைக் கடமையை ஊக்குவித்தல் - தங்களுக்கு விருப்பமான மொழியில் தகவல்களைப் பெறுபவர்கள் தேசிய விவகாரங்களில் ஆர்வம் காட்டவும், விவாதங்களில் பங்கேற்கவும், அரசாங்கத்திட்டங்கள்மீது கருத்துரைக்கவும் அதிக வாய்ப்புள்ளது





தேசிய மொழிபெயர்ப்புக்குழு மொழிபெயர்ப்புத் தரத்தை உயர்த்துவது மட்டுமல்லாமல் சமூகங்களையும் அணுக்கமாக ஒன்றிணைக்கிறது.

“2013க்கும் 2014க்கும் இடையில் நேர்ந்த தொடர் சம்பவங்களால் தவறான மொழிபெயர்ப்புகள்மீது கவனம் திரும்பியது. தவறுகளால் ஏற்பட்ட சங்கடத்துக்கு மேலாக இவை போன்ற சம்பவங்கள் ஆங்கிலத்தை அதிகம் வாசிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலாத சிங்கப்பூரர்களின் தேவைகளில் அரசாங்கம் போதுமான கவனம் செலுத்துகின்றதா என்ற கேள்விகளை எழுப்பின.

இங்குதான் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் பணி அவசியமாகிறது. குழுவில் சேர்ந்த சீன, மலாய், தமிழ் மொழிபெயர்ப்பு நிபுணர்கள் மொழிபெயர்ப்பு தொடர்பான வேலை நடைமுறைகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்தலாம் என்பது குறித்துப் பல ஆக்ககரமான யோசனைகளை முன்வைத்தது மனநிறைவளித்தது.

தொழில்துறை நிபுணர்களின் ஆதரவு, தனிப்பட்ட செயலகம் ஆகியவற்றைக் கொண்டிருந்த தேசிய மொழிபெயர்ப்புக் குழு நான் தலைவராகப் பணியாற்றிய ஆக திறமைமிக்க குழுக்களில் ஒன்று.”



—

**சிம் ஆன்**
முதல் தலைவர், தேசிய மொழிபெயர்ப்புக் குழு (2014–2015, 2018–2021)
மூத்த துணை அமைச்சர்
வெளியுறவு அமைச்சு, தேசிய வளர்ச்சி அமைச்சு

“நிர்வாகம், கற்பித்தல், வணிகம் ஆகியவற்றில் ஆங்கிலம் நமது பிரதான மொழியாகத் தொடரும் வேளையில் நமது தாய்மொழிகள் நம்மைப் பற்றியும் நமது மரபுடைமை, அடையாளம் ஆகியவை பற்றியும் மேலும் ஆழமாகப் புரிந்துகொள்ள முக்கியமானவை.

பன்மொழித்தன்மை மற்ற நாடுகள், பண்பாடுகளைச் சேர்ந்த மக்களுடன் தொடர்புகொள்ள சிங்கப்பூரர்களுக்கு உதவுகிறது. அதேவேளையில் நாம் யார், உலகமயச் சூழலில் நமது நிலை என்ன என்பது குறித்த நம்பிக்கை உணர்வை அளிக்கிறது. சிங்கப்பூரின் சமுதாயக் கட்டமைப்பில் அது ஒரு முக்கிய பகுதி. திறன்மிகுந்த மொழிபெயர்ப்பு ஆற்றல்கள் சிங்கப்பூர் போன்ற பன்மொழிச் சமுதாயத்தில் இன்றியமையாத ஒன்றாக நீடிக்கும். ”



—

**சீ ஹொங் டாட்**
தலைவர், தேசிய மொழிபெயர்ப்புக் குழு (2015–2018)
போக்குவரத்து அமைச்சர், இரண்டாம் நிதி அமைச்சர்

## நல்ல மொழிபெயர்ப்பு என்றால் என்ன? மொழிபெயர்ப்பு வளமைக் குழுவைக் கேளுங்கள்!

தேசிய மொழிபெயர்ப்புக் குழுவிற்கு வளமைக் குழுக்கள் (RP) ஆதரவளிக்கின்றன. ஒவ்வோர் அதிகாரத்துவ மொழிக்கும் குழு உள்ளது. அவர்கள் குறிப்பிட்ட மொழிபெயர்ப்புச் சிக்கல்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குகிறார்கள்; திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்கிறார்கள். அதோடு சொற்களின் மொழிபெயர்ப்பில் தரத்தைக் கொண்டுவர உதவுகிறார்கள் அல்லது அவற்றின் ஏற்புடைத்தன்மை குறித்து ஆலோசனை வழங்குகிறார்கள்.



“அரசாங்க மொழிபெயர்ப்புகளைச் செய்யும்போது துல்லியம்தான் மிகவும் அவசியமா? ஆமாம். பெரும்பாலும் அது தேவை. ஆனால், எல்லா நேரங்களிலும் இல்லை. பனுவலில் இடைவெளி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக நாம் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்தால், மொழிபெயர்க்கப்பட்ட பனுவல் இயற்கையான சீனமொழிப் பயன்பாடு போல் அல்லாமல் மிகவும் விசித்திரமாகவும் கடினமாகவும் மாறும். விவரமறிந்த மக்கள் இது ஒரு நேரடி மொழிபெயர்ப்பு என்பதை முதல் பார்வையிலேயே அறிந்துகொள்வார்கள்.”

—
**பீட்டர் ஓங்**
*Lianhe Zaobao* நாளிதழின் இணை ஆசிரியர், சீனமொழி வளமைக் குழுவின் தலைவர்

உலக நாடுகள் பன்மொழிப் போக்கைப் பறைசாற்றும் வேளையில் சிங்கப்பூர் அதிலிருந்து அகன்றால் என்ன ஆகும்?



"மலாய்மொழி வளமைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் வெவ்வேறு பின்னணிகள், அனுபவங்கள், வயதைச் சேர்ந்தவர்கள். எனவே, ஆங்கிலத்துடனும் மலாயுடனும் உள்ள எங்கள் அனுபவங்கள் வேறுபடுகின்றன. மொழிபெயர்க்கும்போது நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் பின்னணியின் அடிப்படையில் கருத்துகளை முன்வைப்போம். எல்லாவற்றையும் பரிசீலிப்போம். விவாதிப்போம். பின்னர் பொருத்தமான மொழிபெயர்ப்பு எதுவாக இருக்கும் என்பதில் உடன்பாட்டை எட்டுவோம்."

—

முகமது முக்லிஸ் அபு பக்கார்
இணைப் பேராசிரியர், தேசியக் கல்விக்கழகத்தின் ஆசிய மொழிகள், கலாசாரக்கல்விக் குழுவின் தலைவர், மலாய்மொழி வளமைக் குழுவின் தலைவர்.



"மொழி குறித்த இரண்டு கண்ணோட்டங்கள் உள்ளன: ஒரு தரப்பினர் மொழியை அதன் பாரம்பரிய வடிவத்தில் பாதுகாக்க வாதிடுகிறார்கள், மற்றொரு தரப்பினர் மாறிவரும் காலத்திற்கேற்ப மொழியிலும் கொஞ்சம் வளைந்துகொடுக்கலாம் என்று கருதுகின்றனர். மொழியின் சாரத்தை இழக்காமல் மக்களுடன் திறம்படத் தொடர்புகொள்வதற்கு இந்தக் கருத்துகளில் சமநிலை காண்பது மிக முக்கியம். இறுதியில் அதைப் பயன்படுத்துவோர் இடையே குழப்பத்தைக் குறைக்கவும், தெளிவை உறுதிசெய்யவும் அரசாங்கம், ஊடகங்கள், கல்விநிலையங்கள் ஆகியவை ஒருமித்த கருத்தை எட்டுவது அவசியம்."

—

சாந்தி செல்லப்பன்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் இயக்குநர், தமிழ்மொழி வளமைக் குழுவின் தலைவர்

நம் இளம் தலைமுறையினர் வகுப்பறைகளுக்கும் அப்பால் இருமொழிப்புலமையை வெளிப்படுத்த நாம் எவ்வாறு உதவலாம் என்பதை அறியுங்கள்.

ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைக் கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுங்கள்.

# தேசிய மொழிபெயர்ப்புக் குழு கடந்து வந்த பாதை

## 2014

மார்ச் 1 – தேசிய மொழிபெயர்ப்புக் குழு (NTC) தொடக்கம்

"நாங்கள் நிபுணத்துவ மொழிபெயர்ப்பாளர் சமூகத்தை ஒன்றுதிரட்ட வேண்டியிருந்தது. அவர்களின் ஆதரவும் உதவியும் எனக்கும் எனது அப்போதைய தொடர்பு, தகவல் அமைச்சு சகாக்களுக்கும் பெரிதும் கைகொடுத்தன. மொழிபெயர்ப்புக்கு நாங்கள் செய்ய விரும்பிய அனைத்தும் நிபுணர்களின் ஆதரவுடன் மட்டுமே சாத்தியமாகும் என்பதை நான் அறிந்திருந்தேன்."

—

தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் முதல் தலைவராக இருந்த காலம் பற்றி வெளியுறவு, தேசிய வளர்ச்சி அமைச்சுகளுக்கான மூத்த துணையமைச்சர் சிம் ஆன்.

## 2015

பொதுச்சேவையில் மொழிபெயர்ப்புத் திறனாளர்களை வளர்ப்பதற்கான முதல் அரசாங்க உபகாரச் சம்பளமாகத் தகவல் சேவை மொழிபெயர்ப்பு உபகாரச் சம்பளம் அறிமுகம்.




முன்னாள் தொடர்பு, தகவல் அமைச்சர் யாக்கோப் இப்ராஹிம் (நடுவில்), தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் அப்போதைய தலைவர் சிம் ஆன் (இடப்பக்கத்திலிருந்து இரண்டாவது) முதல் தொகுதி மொழிபெயர்ப்புக் கல்விமான்களுடன் (வலப்பக்கத்திலிருந்து நான்காவது, ஐந்தாவது)

தரமான மொழிபெயர்ப்புகளைப் பெறவும் தயாரிக்கவும் பொதுச் சேவைக்கு உதவும் வகையில் அரசாங்கம் முழுவதற்குமான மொழிபெயர்ப்புச் சேவைகளுக்குரிய கால அடிப்படையிலான ஒப்பந்த உடன்படிக்கை அறிமுகம்.

நான்கு அதிகாரத்துவ மொழிகளில் அமைச்சுகளின் பெயர்கள், அரசாங்கத் திட்டங்கள், முக்கிய இடங்கள் ஆகியவை உள்ளிட்ட ஒருமுகப்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்புகளின் களஞ்சியமான அரசாங்கச் சொல்வளத் தரவுத்தளம் (Government Terms Translated) அறிமுகம்.



## 2016

அப்போதைய மூத்த துணையமைச்சர் சீ ஹொங் டாட் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்கிறார்.

**"மொழிபெயர்ப்பு அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையேயும், சமூகங்களுக்கிடையேயும் தகவல்தொடர்பை உறுதிசெய்வதன்மூலம் சமூகங்களை ஒன்றிணைக்கிறது... தரமான மொழிபெயர்ப்பை உருவாக்குவது என்பது நமது வெவ்வேறு இனச் சமூகங்களை மதிப்பது. இதனால்தான் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் பணி இங்கு மிக முக்கியம்."**

—

2015 முதல் 2018 வரை தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் தலைவராக இருந்த காலம் பற்றிப் போக்குவரத்து அமைச்சர் சீ ஹொங் டாட்.

மொழிபெயர்ப்பில் பொதுமக்களின் விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் அதிகரிக்கும் திட்டங்களுக்கு ஆதரவளிக்க 'மொழிபெயர்ப்பில் சமூகம்' (CiT) தொடக்கம்.



மாணவர்களுக்கான முதல் சீன மொழிபெயர்ப்புப் பயிலரங்கிற்கு 'மொழிபெயர்ப்பில் சமூகம்' (CiT) ஆதரவளித்தது.

## 2017

எஸ்ஜி மொழிபெயர்ப்பு (SG Translate) என்னும் சிங்கப்பூருக்கான இயந்திர மொழிபெயர்ப்புச் சாதனம் அறிவியல், தொழில்நுட்ப, ஆய்வு அமைப்பின் தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்துடன் இணைந்து அறிவார்ந்த தேசத் திட்ட நடவடிக்கை அலுவலகத்தின் ஆதரவில் உருவாக்கம்.

SG Translate

## 2018

வளர்தமிழ் இயக்கத்துடன் இணைந்து ஆங்கிலம்-தமிழ் இருமொழிச் சொல்வளக் கையேடு வெளியீடு.



காலஞ்சென்ற ஆ. பழனியப்பன், அப்போதைய தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் தமிழ்மொழி வளமைக் குழுத் தலைவர் (இடது), அப்போதைய மூத்த துணையமைச்சர் சீ ஹொங் டாட் (நடுவில்), R. ராஜாராம், அப்போதைய வளர்தமிழ் இயக்கத் தலைவர் (வலது). (நிழற்படம்: வளர்தமிழ் இயக்கம்)

மூத்த துணையமைச்சர் சிம் ஆன் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றார்.

தனியார் துறை மொழிபெயர்ப்பாளர்கள் அவர்களின் ஆற்றலை மேம்படுத்த உதவும் வகையில் மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டுத் திட்டம் (TTDS) தொடக்கம்.



மூத்த துணையமைச்சர் சிம் ஆன் (நடுவில்), மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டுத் (TTDS) திட்டத்தின்கீழ் விருதுபெற்ற முதல் தொகுதி மொழிபெயர்ப்பாளர்கள்.

## 2019

எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரம் அரசாங்கம் முழுவதற்கும் அறிமுகம்.

சிங்கப்பூரில் மொழிபெயர்ப்பு தானியக்கப் பயனீட்டாளர் சங்கத்தின் ஆசிய மாநாடு நடத்தப்பட்டது. இதில் 23 நாடுகளிலிருந்து 211 பேராளர்கள் பங்கேற்றனர்.




மூத்த துணையமைச்சர் சிம் ஆன் மாநாட்டுப் பேராளர்களை வரவேற்கிறார். (நிழற்படம்: TAUS)

## 2020

மொழிபெயர்ப்பு சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிக்க 'மொழிபெயர்ப்பில் சமூகம்' நிகழ்ச்சி மானியம் (CiTEG) அறிமுகம்.

COMMUNITY-IN-TRANSLATION
EVENTS GRANT

## 2021

அரசாங்கத் தொடர்புத் தகவல்களைச் சரிபார்க்கக்கூடிய தொண்டூழியர்களைத் திரட்டுவதற்கு மொழிபெயர்ப்பில் குடிமக்கள் திட்டப்பணி அறிமுகம்.



பெருந்தொற்றுக் காலத்தின்போது, மூத்த துணையமைச்சர் சிம் ஆன் குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்களை இணையம்வழி சந்திக்கிறார்.

அப்போதைய துணையமைச்சர் டான் கியெட் ஹவ் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

## 2022

எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரத்தைப் பொதுமக்கள் பெறுவதற்கு வசதியாக எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு (SG Translate Together) இணையவாசல் தொடக்கம்.



மூத்த துணையமைச்சர் டான் கியெட் ஹவ் (வலது) எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு (SGTT) இணையவாசலின் தொடக்க விழாவில்.

## 2023

மொழிபெயர்ப்பு தொடர்பான விவகாரங்களைக் கலந்துரையாட குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்கள் உடனான முதல் நேரடி சந்திப்புக்கூட்டம் நடத்தப்பட்டது.



சந்திப்பு நிகழ்ச்சியில் மூத்த துணையமைச்சர் டான் கியெட் ஹவ்-உடன் சுமார் 200 குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்கள்.

## 2024

தேசிய மொழிபெயர்ப்புக் குழு அதன் 10ஆம் ஆண்டுநிறைவைக் கொண்டாடுகிறது.

10th ANNIVERSARY

SG NATIONAL TRANSLATION COMMITTEE

# வேகமாக, சிறப்பாக, ஒன்றாக.

தேசிய மொழிபெயர்ப்புக் குழு தொழில்நுட்பத்துடன் பணிபுரிதல், திறனாளர்களை ஆதரித்து வளர்த்தல், மொழிபெயர்ப்பில் ஆர்வத்தை வளர்ப்பதற்காகச் சமூகத்துடன் கைகோர்த்தல் ஆகியவற்றின்மூலம் மொழிபெயர்ப்பின் தரத்தை உயர்த்துகிறது.



wiTTy என்பது எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசலுக்கான நட்பார்ந்த இயந்திர மனிதச் சின்னமாகும். இது விவேகம் (Wise), தகவல் அறிவு (Informative), கூட்டு மொழிபெயர்ப்பு (Translate Together), இளமை (Youthful) ஆகியவற்றைக் குறிக்கிறது.

# மேம்பட்ட மொழிபெயர்ப்புகளுக்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

சிங்கப்பூரின் மொழிபெயர்ப்புத் தரத்தையும் உற்பத்தித்திறனையும் உயர்த்தக்கூடிய மொழிபெயர்ப்பு இயந்திரத்தின் (MT) ஆற்றல் அளப்பரியது. 2019ஆம் ஆண்டில், தேசிய மொழிபெயர்ப்புக் குழு சிங்கப்பூரின் உள்ளூர்த் தேவைக்குப் பொருத்தமான மொழிபெயர்ப்பு இயந்திரத்தை உருவாக்கப் பல்வேறு அரசாங்க அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டதுடன், சமூகத்தோடு கைகோர்த்து தொடர்ந்து அதனை வளர்த்துவந்தது.

## எஸ்ஜி மொழிபெயர்ப்பு (SGT)

இது உள்ளூர்மயமாக்கப்பட்ட மொழிபெயர்ப்புகளை உருவாக்க அறிவியல், தொழில்நுட்ப, ஆய்வு அமைப்பின் (A*STAR) தகவல்தொடர்பு ஆய்வுக்கழகத்துடன் ($I^2R$) இணைந்து உருவாக்கப்பட்ட மொழிபெயர்ப்பு இயந்திரம்.

## எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு (SGTT)

இது எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரத்தைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கான ஓர் இணையவாசல். மொழிபெயர்ப்பு வளங்களுக்கான இணையவாசலாக இருப்பது மட்டுமின்றி அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பின் CrowdTaskSG தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்புகளைத் திரட்டுகிறது, எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசல். அதோடு எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரத்தின் துல்லியத்தை மதிப்பாய்வு செய்வதிலும் மேம்படுத்துவதிலும் சமூகத்தை ஈடுபடுத்துகிறது. எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசல் தொடங்கப்பட்டது முதல், 269,000 வருகைகளை ஈர்த்துள்ளது; 2024இல் மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 20,000க்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புப் பனுவல்களை உருவாக்கியுள்ளது.



பொதுச்சேவை அதிகாரிகள் எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று கற்றுக்கொள்கின்றனர்.

# சிங்கப்பூரின் சொந்த மொழிபெயர்ப்பு இயந்திரத்தின் உருவாக்கம்



அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பின் கென்னத் லோ (இடம்), ஜலின் சியா (வலம்)

பொதுச்சேவையில் தொடர்புத்துறை நிபுணராக இருந்த ஜலின் சியா மொழியியல், பன்மொழி ஆய்வுகள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தபோதிலும் அரசாங்கக் கலைச்சொற்களை மொழிபெயர்ப்பது அவருக்குச் சவாலாக இருந்தது.

“அது சுலபமானது அல்ல. சில குறிப்பிட்ட நுணுக்கங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியிருந்தது,” என்று அவர் விளக்குகிறார்.

ஆனால், உள்ளூர்ச் சூழல்களைக் கருத்திற்கொள்ளவும், அரசாங்கம் முழுவதும் மொழிபெயர்ப்புகளைத் தரநிலைப்படுத்தவும் எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரம் பொதுச் சேவையில் அறிமுகப்படுத்தப்பட்டபோது இந்த நிலை மாறியது. அதற்குள் அரசாங்கத் தொழில்நட்ப அமைப்பில் நிர்வாக அதிகாரியாகச் சேர்ந்திருந்த ஜலீன், அதன் ஆற்றலைக் கண்டு “பிரமித்துப்போனார்”. “இந்தக் கருவி மட்டும் என்னிடம் அப்போது இருந்திருந்தால் ...” என்ற அவர், இது ஒரு மிகப் பெரிய மாற்றம் என்கிறார்.

எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரமானது தேசிய மொழிபெயர்ப்புக் குழுவால் தொடங்கப்பட்டது. இது 2014ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து மொழிபெயர்ப்புத் தரங்களையும் உற்பத்தித்திறனையும் உயர்த்துவதற்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயன்று வருகிறது.



ஜெங் வெய்ஹுவா (இடம்), வூ குவே (வலம்) தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த இவர்கள் எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரத்தை உருவாக்க உதவினர்.

மொழிபெயர்ப்பு இயந்திரங்கள் அதற்கு ஓர் உதாரணம். அவை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளன. எனினும் ஏற்கனவே உள்ள மாதிரிகள் பெரும்பாலும் உள்ளூர்ச் சூழல்களுக்குப் பொருத்தமாக அமைவதில்லை. சிங்கப்பூருக்கென உள்ளூர்மயமாக்கப்பட்ட மொழிபெயர்ப்பு இயந்திரத்தை உருவாக்கக் குழு முடிவெடுத்தது. இது அறிவியல், தொழில்நுட்ப, ஆய்வு அமைப்பின் தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த கணினி அறிவியலாளர்கள், பொறியியலாளர்கள் ஆகியோரையும் அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பின் பொறியியலாளர்கள், வடிவமைப்பாளர்கள், அப்போதைய தொடர்பு, தகவல் அமைச்சின் மொழி வல்லுநர்கள் ஆகியோரை ஒன்றிணைத்தது – அனைவருமே இந்தப் பணியில் இணைவதற்கு ஆர்வமாக இருந்தனர்.

“இயந்திர மொழிபெயர்ப்பு என்பது மொழியியல், கணினி அறிவியல், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் நூதன இணைப்பு” என்று தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்தின் மூத்த அறிவியலாளர் வூ குவே கூறுகிறார். “தொழில்நுட்பம் எவ்வாறு மொழிகளுக்கு இடையில் பாதைகளை உருவாக்குகிறது, தொடர்புகளை எவ்வாறு எளிதாக்குகிறது என்று நான் எப்போதுமே கண்டு வியப்பதுண்டு.”

தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சின் (MDDI) திட்டப்பணி நிர்வாகி ஜெஸ்டின் இங்கிற்கு, இந்தத் திட்டம் தொழில்நுட்பத்தின்மூலம் ஆக்ககரமான விளைவை ஏற்படுத்த ஒரு வாய்ப்பாக அமைந்தது. “துல்லியமான, நம்பகமான மொழிபெயர்ப்புத் திறன்களை வழங்குவதன்மூலம், அனைவரையும் உள்ளடக்கிய, இணக்கமான சமுதாயத்திற்கு இந்தத் தொழில்நுட்பம் பங்காற்றமுடியும். அனைத்துக் குடிமக்களும் அரசாங்கம் வழங்கும் முக்கியமான தகவல்களையும் சேவைகளையும் பெறமுடியும்; புரிந்துகொள்ளமுடியும்,” என்று அவர் கூறுகிறார்.

## தரவுப் பற்றாக்குறையைச் சமாளித்தல்

மொழிபெயர்ப்பு இயந்திரத்தை உருவாக்குவதில் பயிற்சி முக்கிய பங்காற்றுகிறது. சிங்கப்பூரின் பண்பாட்டு நடைமுறைகளுடனும் விருப்பங்களுடனும் ஒத்துப்போகும் மொழிபெயர்ப்புகளை உருவாக்க, குழு அரசாங்க அமைப்புகளின் பெயர்கள், அடையாளச் சின்னங்கள், சிங்கப்பூரில் உள்ள தெருக்கள் போன்ற உள்ளூர்த் தரவுகளை ஆதாரமாகக்கொண்டு தொகுக்க வேண்டியிருந்தது. போதுமான துல்லியத்தை உறுதிப்படுத்த போதுமான மாதிரிகள் இல்லாததால், தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்தின் அறிவியலாளர்கள் பல்வேறு இயந்திரப் பயிற்சி நுட்பங்களை உருவாக்க வேண்டியிருந்தது - தரவுப் பெருக்கம், குறைந்த வளப் பயிற்சி உட்பட – அவற்றைக் கொண்டு செயற்கையாக அதிக மாதிரிகளை உருவாக்க வேண்டியிருந்தது. குறிப்பாக ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றுக்கு இடையிலான மொழிபெயர்ப்பை ஆதரிப்பதில் இது மிக முக்கியமாகத் தேவைப்பட்டது. ஏனெனில் இந்த மொழி இணைக்கு மிகக் குறைவான இருமொழித் தரவுகளே இருந்தன.

"தமிழ்மொழி சவாலாக இருந்ததற்கு மற்றொரு காரணம், எங்களுக்கு மொழி புரியாததுதான்" என்று தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்தின் மூத்த பொறியியலாளர் ஜெங் வெய்ஹுவா கூறுகிறார். "சிக்கலான மொழியியல் சவால்களைச் சமாளிப்பதற்கு நாங்கள் தமிழ்மொழி வல்லுநர்களின் நிபுணத்துவத்தை நாடினோம்."

மொழிபெயர்ப்பைத் தானியக்கமாக்குவது இலக்காக இருப்பினும், மொழிபெயர்ப்பு இயந்திரத்தின் ஆற்றலை மேம்படுத்துவதில் மனிதர்களின் நிபுணத்துவ ஆலோசனை முக்கியமானது. இப்பணியை எளிதாக்குவதற்கு தகவல்தொடர்பு ஆய்வுக் கழகத்தின் அறிவியலாளர்கள், எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பை (SGTT) உருவாக்க அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்புடன் இணைந்தது. இது எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரத்தைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும் இணையவாசல் ஆகும். உருவாக்கத்தின்போது, அரசாங்கத் தொழில்நுட்பப் பொறியாளர் கென்னத் லோ மொழிகளுக்குத் தனித்துவமான சிந்தனைகளும் கட்டமைப்பும் இருப்பதை அறிந்துகொண்டார். உதாரணத்திற்கு, கையடக்கச் சாதனங்களில் தெளிவாகத் தெரிவதற்காக வார்த்தைகளைப் பிரிக்கும் ஓர் அம்சத்தை உருவாக்கும்போது, இது தமிழ்ச்சொற்களின் அர்த்தத்தை மாற்றக்கூடும் என்பதை அவர் உணர்ந்தார்.

"சிங்கப்பூரின் அதிகாரத்துவ மொழிகளை ஆழமாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை நான் பெற்றேன். மொழிபெயர்ப்புப் பணியின் சிக்கல்களையும் புரிந்துகொண்டேன்," என்று அவர் கூறுகிறார்.




எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசல் (SGTT) பல்வேறு நிகழ்ச்சிகளின்வழி பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## உரிய நேரத்தில் துவக்கம்

எஸ்ஜி மொழிபெயர்ப்பு இயந்திரம் (SGT) 2019ஆம் ஆண்டில், கொவிட்-19 பெருந்தொற்றின்போது முக்கிய பங்காற்றுவதற்குச் சரியான நேரத்தில் பொதுச்சேவையில் அறிமுகம் கண்டது. மக்களிடத்தில் தகவல்களை விரைவாகக் கொண்டுசேர்க்க முக்கியமான அரசாங்கச் செய்திகளின் முதற்கட்ட மொழிபெயர்ப்புகளை இயந்திரம் உருவாக்கிக் கொடுத்தது. பொதுமக்களுக்கான எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசல் (SGTT) மூன்று ஆண்டுக்குப் பிறகு அறிமுகம் கண்டது. உடனே அதனைப் பலரும் பயன்படுத்தத் தொடங்கினர். சட்ட நிறுவனங்களையும் அது ஈர்த்தது; சட்ட விதிமுறைகளை மொழிபெயர்ப்பதற்கு இதைப் பயன்படுத்தத் தொடங்கின.

இவை SGT, SGTT ஆகியவை விரிவுபடுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன என்று இவற்றின் உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் மேற்பார்வையிட்ட தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சின் மின்னிலக்க வர்த்தக ஆய்வாளர் டாப்னி டே கூறுகிறார். அவரும் அவருடைய குழுவினரும் எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசலை மொழிபெயர்ப்புச் சமூகத்திற்கான ஒரே தளமாக மாற்றியமைத்துள்ளனர். அந்தத் தளத்தில் மொழிபெயர்ப்பு வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; கருத்துகளைப் பரிமாறலாம்; மொழிபெயர்ப்பு தொடர்பான நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

இந்த மேம்பாடுகளில் ஈடுபட்ட குழு உறுப்பினர்களில் ஒருவர் ஜலின். அவர் வேறு யாருமல்ல. இந்த முயற்சியின் ஆரம்ப நாள்களில் துடிப்பாகப் பங்காற்றியவர். இப்போது எஸ்ஜி கூட்டு மொழிபெயர்ப்பு இணையவாசலை நிர்வகிக்கிறார்.

"எனது பண்புகளுடன் ஒத்துப்போவது மட்டுமல்லாமல், இதேபோன்ற சவால்களை எதிர்கொள்ளும் மற்றவர்களுக்கு உதவும் திறனைக் கொண்ட ஒன்றுக்குப் பங்காற்றும் அனுபவம் நம்ப முடியாத அளவிற்கு மனநிறைவைத் தருகிறது" என்று அவர் கூறுகிறார்.

# அடுத்த தலைமுறை மொழிபெயர்ப்புத் திறனாளர்களை வளர்த்தல்

2015 முதல் தேசிய மொழிபெயர்ப்புக் குழு, மொழிபெயர்ப்பில் வலுவான ஆர்வமும் உள்ளூர்ச் சூழலில் ஆழ்ந்த அறிவாற்றலும் கொண்ட இளம் சிங்கப்பூரர்களின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது. பொதுத்துறையிலும் தனியார் துறைகளிலும் மொழிபெயர்ப்பு ஆற்றலைக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக அது உபகாரச் சம்பளத்தையும் திறன் மேம்பாட்டு விருதையும் முறையே அறிமுகப்படுத்தியது:



2019 மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டுத் திட்டத்தின் பயிற்சி விருது பெற்றவர்கள். உடனிருப்பவர் மூத்த துணையமைச்சர் சிம் ஆன் (நடுவில்)

## மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டுத் திட்டம் (TTDS)

இது மொழிபெயர்ப்பிலும் உரைபெயர்ப்பிலும் ஈடுபட்டுள்ள தனியார் துறையைச் சேர்ந்த சிங்கப்பூரர்கள் அவர்களின் திறன்களை ஆழப்படுத்த உதவும் பயிற்சி விருதாகும். பயிற்சித் திட்டங்களுக்கான செலவில் 90 விழுக்காட்டை, $10,000 வரை இத்திட்டம் ஈடுசெய்கிறது. மார்ச் 2024 நிலவரப்படி 36 பேருக்கு மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டு விருதாக, $240,000க்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளது.



2022 தகவல் சேவை (மொழிபெயர்ப்பு) கல்விமான் அஃபிஃபா ஷஃபானா (வலமிருந்து இரண்டாவது), அவரது பெற்றோர் ஆகியோருடன் அமைச்சர் ஜோஸஃபின் டியோ.

## தகவல் சேவை (மொழிபெயர்ப்பு) உபகாரச்சம்பளம்

இது கல்விக் கட்டணங்களை வழங்குவதோடு அரசாங்கத் தொடர்புகளிலும் மொழிபெயர்ப்புப் பணியிலும் ஆர்வமுள்ளவர்களுக்குப் படித்தொகையையும் அளிக்கிறது. 2015 முதல் இன்றுவரை, 14 பேருக்குத் தகவல் சேவை (மொழிபெயர்ப்பு) உபகாரச்சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.



“மொழிபெயர்ப்பு திறனாளர் மேம்பாட்டுத் திட்டம் மொழிபெயர்ப்பு தொடர்பான பயிற்சிகளை ஆராய எனக்கு அதிக வாய்ப்புகளை வழங்கியுள்ளது. மொழிபெயர்ப்பில் ஒருமித்த ஆர்வம் கொண்டவர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.”

—

நூர் டிஜானா
மொழிபெயர்ப்புத் திறனாளர் மேம்பாட்டு விருது பெற்றவர் (2023)

# பிறவி மொழிபெயர்ப்பாளர்



ஜெரமியா ஜொயெல் பீட்டர் தம்முடைய முதல் மொழிபெயர்ப்புப் பணிக்கு ஊதியம் பெற்றபோது அவருக்கு வயது 11. தமிழ் மட்டுமே பேசும் மூவர் கொண்ட குடும்பத்தில் வளர்ந்த இந்தச் சிறுவன் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவனாகக் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தெரிந்திருந்தான்.

இப்போது அவர் தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிகிறார் என்பது ஆச்சரியமல்ல என்றாலும், இந்தத் தொழில் ஒன்று இருக்கிறது என்பது வளரும் பருவத்தில் அவருக்குப் புலப்படவில்லை.

"சிங்கப்பூரில் தமிழ் பேசுபவர்களுக்கு இதுபோன்ற வாய்ப்புகள் இருப்பதை நான் அறிந்திருக்கவில்லை என்பதால் மொழிபெயர்ப்பை ஒரு தொழிலாக மேற்கொள்ளவேண்டும் என்று ஓர் இளைஞனாக எனக்குப் பெரிய கனவுகள் இருந்ததில்லை" என்று கூறும் ஜெரமியாவுக்கு, உயர்நிலைப்பள்ளியில் உயர்தமிழையும் தமிழில் இலக்கியத்தையும் பயின்றதன்மூலம் மொழியின்மீது தணியாத ஆர்வம் இருந்தது.

ஊடகத் தொடர்புத்துறையில் பட்டயக்கல்வி முடித்த பின்னர் தமது பல்கலைக்கழகக் கல்விக்கு உதவியாக மானியங்களைத் தேடினார். 2015ஆம் ஆண்டில் தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சின் தகவல் சேவை (மொழிபெயர்ப்பு) உபகாரச்சம்பளத்தைப் பெறும்வரை மொழிபெயர்ப்புத் தொழிலைப் பற்றிய எண்ணமே இல்லை.

"நான் எனக்குள் நினைத்தேன் - எனக்குத் தொடர்புத்துறையில் வேலை மட்டுமல்ல, தமிழ்மொழியைப் பயன்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கிறதா? என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்!" என்கிறார். பின்னர் நடந்தது அனைவரும் அறிந்ததே.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் பொதுக்கொள்கை, உலக விவகாரத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றபோது, ஜெரமியா மொழியியலிலும் இளங்கலைப் பட்டத்தை முடித்தார். சமூக, வரலாற்று மொழியியல் போன்ற பாடத்தொகுதிகளையும் அவர் பயின்றார். அது தமிழின் தனித்துவமான மொழித்தன்மை, அவரது மொழியியல் அடையாளம் ஆகியவற்றை மேலும் போற்றச் செய்தது.

"பட்டம் பெற்றதும் எனது அறிவாற்றலைப் பயன்படுத்தக்கூடிய மொழிபெயர்ப்பில் எனக்கு ஒரு தொழில் அமையாமல் இருந்திருந்தால், எனது செலவு மிகுந்த பல்கலைக்கழகக் கல்வியை இந்தச் சிறப்புமிக்க ஆர்வங்களைத் தொடர்வதற்குச் செலவழிப்பது அர்த்தமற்ற ஒன்றாகத் தோன்றியிருக்கலாம்" என்று 29 வயதான அவர் கூறுகிறார்.

முன்னோக்கிப் பார்க்கும்போது, சிங்கப்பூரில் தமிழ்மொழிக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்று ஜெரமியா கருதுகிறார். மொழியார்வம் கொண்ட ஒருவர் தம்முடைய திறமையை வளர்த்துக்கொள்ள பல வாய்ப்புகள் உள்ளன. அது கல்வித்துறை, ஊடகம் அல்லது தொழில்நுட்பமாகக்கூட இருக்கலாம் என்கிறார் அவர்.

"தமிழ்ப் புலமைக்கு மதிப்பளிக்கும் தொழில் வாய்ப்புகள் இன்னமும் ஏராளம் இருக்கின்றன. சொல்லப்போனால், அந்த வாய்ப்புகள் வளர்ந்து வருகின்றன என்று நான் தைரியமாகக் கூறுவேன்!"

**ஒரு மொழி, பல மொழிபெயர்ப்புகள்**

தமிழ் பல வழக்குகளைக் கொண்ட ஒரு மொழி. அதன் எழுத்து வடிவமும் பேச்சு வழக்கும் மாறுபட்டவை. பேசும் வட்டாரங்களைப் பொறுத்து வேறுபாடுகள் அமையும். ஜெரமியா சிங்கப்பூரில் என்ன தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் கவனித்து, மொழிபெயர்ப்புகள் உள்ளூர்ச் சூழலுக்குப் பொருத்தமானவை என்பதை உறுதிப்படுத்துகிறார்.

| ஆங்கிலம் | சிங்கப்பூர் வழக்கு | பிற நாட்டு வழக்கு |
|---|---|---|
| President | அதிபர் | ஜனாதிபதி |
| Percentage | விழுக்காடு | சதவீதம் |
| Hospital | மருத்துவமனை | வைத்தியசாலை |

# சமூகத்துடன் இணைந்து செயல்படுதல்

சிங்கப்பூரில் மொழிபெயர்ப்பையும் மொழியின் தரத்தையும் உயர்த்துவதற்காக தேசிய மொழிபெயர்ப்புக் குழு பல திட்டங்களைச் செயற்படுத்துகிறது. நமது மொழிபெயர்ப்புச் சமூகத்தின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொள்ளுதல், மொழிபெயர்ப்பில் ஆர்வமுள்ள தனிநபர்களை ஈடுபடுத்துதல், மொழிபெயர்ப்பு தொடர்பான சமூக முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல் போன்றவற்றை அது மேற்கொண்டுள்ளது:



பல ஆண்டுகளாக, தேசிய மொழிபெயர்ப்புக் குழு எல்லா வயதினரையும் மொழிகளையும் சேர்ந்த சமூகத்தை ஈடுபடுத்துவதற்காகப் பல்வேறு மொழிபெயர்ப்புக் கருத்தரங்குகள், பயிலரங்குகள், போட்டிகள் ஆகியவற்றுக்கு ஆதரவளித்துள்ளது.





## மொழிபெயர்ப்பில் குடிமக்கள் (CT) திட்டப்பணி



இத்திட்டப்பணியில் அரசாங்கத் தொடர்பு சம்பந்தப்பட்ட விவரங்களைச் சரிபார்த்துப் பிழைத்திருத்தம் செய்யக்கூடிய தொண்டூழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்ப்புப் பிழைகளை அடையாளம் கண்டு திருத்தங்களை முன்மொழிகின்றனர். இன்று, 15 முதல் 88 வயதுடைய சுமார் 2,500 உறுப்பினர்கள் இத்திட்டத்தில் உள்ளனர்.

## ‘மொழிபெயர்ப்பில் சமூகம்’ (CiT) பயிலரங்குகள்



மொழிபெயர்ப்பு சார்ந்த பயிலரங்குகள் அமைப்புகளுடனும் பள்ளிகளுடனும் சேர்ந்து ஏற்பாடு செய்யப்படுகின்றன. 2016 முதல், அத்தகைய 15 பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

## ‘மொழிபெயர்ப்பில் சமூகம்’ நிகழ்ச்சி மானியம் (CiTEG)



மொழிபெயர்ப்பில் கவனம் செலுத்தும் முயற்சிகளுக்கு நிதி வழங்கப்படுகிறது. 2020 தொடங்கி ஜூன் 2024 வரை, இத்திட்டம் சுமார் 60 நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

# நமது மொழிபெயர்ப்புச் சமூகத்தைச் சந்திப்போம்

அவர்கள் தொழில், வயது பாராமல், வாழ்க்கையின் எல்லாப் பின்னணிகளையும் சேர்ந்தவர்கள். தொடர்புகளை மேம்படுத்தும் ஒரே ஆர்வத்துடன் வந்தவர்கள் - அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் மட்டுமல்ல, சமூகங்களுக்கிடையேயும். குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்ப்புகளின் துல்லியத்தையும் ஏற்புடைத்தன்மையையும் சரிபார்க்க முன்வருகிறார்கள். அவர்கள் Singpass, TraceTogether செயலிகள் முதல் மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி (Healthier SG) வலைத்தளம் வரையிலான திட்டங்களில் பணியாற்றியுள்ளனர்.



சுந்தர் பிலவேந்தர்ராஜ் ஆரோக்கியராஜ் ஒரு மருந்து நிறுவனத்தில் சுற்றுச்சூழல், சுகாதார, பாதுகாப்புத் துறை மேலாளராகப் பணிபுரிகிறார். சிறு வயதிலிருந்தே, பொது இடங்களில் மொழிபெயர்ப்புப் பிழைகளைக் கண்டறிவது அவரது பொழுதுபோக்கு.

## பிழைகளைக் கண்டறிதல், மாற்றத்தைத் தூண்டுதல்

“இருமொழிகளில் சுவரொட்டி அல்லது பதாகை என் கண்ணில் படும்போதெல்லாம் பிழைகள் உள்ளனவா என்று பார்க்க நான் முற்படுவேன். கொவிட்-19 பெருந்தொற்றின்போது என் குடியிருப்பு வட்டாரத்தில் உள்ள ஒரு மருந்தகத்தின் தமிழ்ச் சுவரொட்டிகளில் தட்டச்சு, மொழிபெயர்ப்புப் பிழைகளைக் கண்டேன். உடனே, நான் அதற்கு உரியவர்களைத் தொடர்புகொண்டேன். அவர்கள் எல்லாச் சுவரொட்டிகளையும் நான் அனுப்பிய சரியான மொழிபெயர்ப்புடன் மாற்றினார்கள். ஆக்ககரமான மாற்றத்தை ஏற்படுத்த இதுபோன்ற தவறுகளை நாம் கவனிக்கவேண்டும்; உடனடியாக செயல்படவேண்டும். மொழிபெயர்ப்பில் குடிமக்கள் திட்டப்பணி பற்றி நான் கேள்விப்பட்டபோது, உடனடியாக என் பங்கையாற்ற அதில் விருப்பம் தெரிவித்தேன். எனது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளும் இதர குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்களைச் சந்திப்பதற்கு இது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்தது”.



ஹெய்டி மா 71 வயதில் மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்த பின்னர் மொழிபெயர்ப்பாளர் ஆனார். Singpass, TokenGoWhere, மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி (Healthier SG) ஆகிய செயலிகளின் மொழிபெயர்ப்புகள் குறித்த மறு-ஆய்வில் அவர் பங்கேற்றுள்ளார்.

## வாழ்நாள் கனவை நிறைவேற்றுதல்

"மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றவேண்டும் என்பது எப்போதுமே எனது கனவாக இருந்து வந்துள்ளது. ஆனால் குடும்பம், வேலைகள் காரணமாக என்னால் அதை நிறைவேற்ற முடியவில்லை. அரசாங்க மருத்துவமனையில் மூத்த மேலாளர் என்ற முறையில், நோயாளிகளுக்கு மருத்துவத் தகவல்களை மாண்டரின் மொழியிலும் சீனக் கிளை மொழிகளிலும் மொழிபெயர்க்குமாறு சில சமயங்களில் என்னிடம் கேட்கப்படும். வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், மொழிபெயர்ப்பில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு நான் விண்ணப்பித்தேன். என் பிள்ளைகள் நான் ஏதோ விளையாட்டாகச் செய்கிறேன் என்று நினைத்தார்கள். நானோ உறுதியாக இருந்தேன். 2021இல் பட்டம் பெற்றதிலிருந்து, சுகாதாரப் பராமரிப்பு பற்றிய இணையத்தளத்தை மொழிபெயர்த்துள்ளேன். சுகாதாரப் பராமரிப்பில் எனக்கிருந்த அறிவாற்றலைப் பயன்படுத்த முடிந்தது. எனது அறிவாற்றலை விரிவுபடுத்த நான் மொழிபெயர்ப்பில் குடிமக்கள் திட்டப்பணியில் சேர்ந்தேன். சிங்கப்பூருக்கே உரித்தான பல சொற்களைக் கற்றுக்கொண்டேன்."

ஹெய்டி மா மொழிபெயர்ப்பில் மேற்கொண்ட வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்!



பஷீர் பசலாமா ஒரு பகுதிநேர மொழிபெயர்ப்பாளர்-உரைபெயர்ப்பாளர், மலாய்மொழி வளமைக் குழுவின் உறுப்பினர். இணையத்தின் ஆரம்பகாலத்தில், மலாய் மொழிபெயர்ப்பு குறித்த சமூக விவாதங்களை நடத்த அவர் ஒரு மின்-மன்றத்தைத் தொடங்கினார்.

## முன்னோடி மொழிபெயர்ப்புச் சமூகங்கள்

“1997ஆம் ஆண்டில், இந்தோனேசிய, மலாய் மொழிபெயர்ப்புகளைப் பற்றிக் கலந்துரையாட எனது இந்தோனேசிய, மலேசிய சகாக்களுடன் பெயர், முகவரிகள் அடங்கிய இரண்டு அஞ்சல் தொகுப்பை உருவாக்கினேன். இது சிங்கப்பூரில் இணையத்தின் ஆரம்பகாலம். இவை இன்றைய இணையச் சமூகங்களுக்கு மின்னஞ்சல் அடிப்படையிலான முன்னோடிகள். நாங்கள் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தோம்: அறிவையும் தகவல்களையும் பகிர்ந்துகொள்வது, சமூக உணர்வை வளர்ப்பது, ஒருவருக்கொருவர் உதவுவது, ஊக்குவிப்பது. மற்ற மொழிபெயர்ப்பாளர்களைச் சந்திப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் பங்காற்றுவதற்கும் கிடைத்த இந்த வாய்ப்பு எனக்கு மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது.”

பஷீர் தமது சொந்த மொழிபெயர்ப்புச் சமூகத்தை எவ்வாறு உருவாக்கினார் என்பதைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்.



**ஜோனஸ் ஃபைன் டான் வென் ஸி** ஆக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தின் மாணவர், பகுதிநேர ஆராய்ச்சியாளர். அரசாங்கச் சார்பற்ற அமைப்புகளில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி வரும் இவர், 12 மொழிகளில் உரையாடக்கூடியவர்.

## கைவசப்படும் கனவு

“குடிமக்கள் மொழிபெயர்ப்பாளராகத் தொண்டூழியம் செய்வது, மொழிபெயர்ப்பிலும் சமூகப் பணியிலும் எனக்குள்ள ஆர்வத்தை ஒன்றிணைத்து, பல்வேறு பின்னணியைச் சேர்ந்த மக்களுக்குச் சிங்கப்பூரை சமத்துவம் நிறைந்த இடமாக மாற்ற அனுமதிக்கிறது. குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்களை ஈடுபடுத்தும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதிலும், சிங்கப்பூரின் மொழியியல் பன்முகத்தன்மையைப் பேணுவதிலும் தாய்மொழி பேசுபவர்கள் தடையின்றித் தகவல் பெறும் வசதியை அதிகரிப்பதிலும் ஆர்வமுள்ள ஒருமித்த எண்ணம் கொண்டவர்களைச் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். மொழிபெயர்ப்பில் குடிமக்கள் திட்டப்பணி நமது தாய்மொழிகளை அதிகாரபூர்வச் சூழல்களுக்கு மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது எதிர்வரும் ஆண்டுகளில் அவற்றின் பயன்பாட்டை அதிகரிக்கும் என்று நான் நம்புகிறேன்.”

குடிமக்கள் மொழிபெயர்ப்பாளராக விருப்பமா? மேலும் அறிந்துகொள்ளுங்கள்!

# போட்டியிட்டுப் பயிலுங்கள்: பன்மொழிப் புலமைவாய்ந்த பதின்ம வயதுப்பெண் மொழிகள் மீதான தமது ஆர்வத்தைப் பரப்புகிறார்



ஏற்கனவே நான்கு மொழிகளை அறிந்த ஏழு வயதுச் சிறுமியை ஐந்தாவது, ஆறாவது, இறுதியாகப் பதினோராவது மொழியைக் கற்றுக்கொள்ள எது தூண்டியது?

லோய் ஜிங்-யியைப் பொறுத்தவரை, ஒரு பெண் வியட்நாமிய மொழியில் வழி கேட்டபோது இது நடந்தது. தொடக்கப்பள்ளியில் சேரும் முன்னரே ஆங்கிலம், மாண்டரின், பிரெஞ்சு, ஜப்பானிய மொழிகளைக் கற்றிருந்தாலும் அந்த நேரத்தில் அவருக்கு அது போதுமானதாகத் தோன்றவில்லை.

"எனக்கு ஏமாற்றமாக இருந்தது," என்கிறார் ஜிங்-யி. "மக்களுடன் நான் இன்னும் நிறைய தொடர்புகொள்ள விரும்பினால், நான் இன்னும் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தேன்."

இன்று, 16 வயதான அவர் 11 மொழிகளில் உரையாடுகிறார். Polyglot Club SG என்னும் அமைப்பை நிறுவியிருக்கிறார். தம்மைப் போன்ற மொழி ஆர்வலர்களுக்காகவும், மொழியைக் கற்றுக்கொள்வதை எளிமையாக்கவும் அவர் 2020இல் இந்த மன்றத்தை அமைத்தார். அவரும் அவருடைய நண்பர்களும் ஒன்றுசேர்ந்து, கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் இலவசமாகப் பாடம் நடத்தத்

தொடங்கினார்கள். மறு ஆண்டில், தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் மூன்றாவது மொழியைத் தீர்மானிக்க உதவும் வருடாந்திர இணையப் பயிலரங்கைத் தொடங்கினர். இதில் இதுவரை 700 மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

2023ஆம் ஆண்டில், சிங்கப்பூரில் மொழித்திறன்களை மேம்படுத்துவதற்குப் பயனுள்ளதாக இருக்கும் மொழிபெயர்ப்புப் போட்டிகள் இல்லாததை ஜிங்-யி கவனித்தார். எனவே, அதே ஆண்டில் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் ‘மொழிபெயர்ப்பில் சமூகம்’ நிகழ்ச்சி மானியத்தின் ஆதரவுடன் முதல்முறையாக நாடு தழுவிய வெளிநாட்டு மொழிபெயர்ப்புப் போட்டியை ஏற்பாடு செய்தார்.

"எனக்கு மானியம் கிடைக்குமா என்று எனக்கு அப்போது தெரியாது. ஏனென்றால் நான் விண்ணப்பித்தபோது எனக்கு 15 வயதுதான். என்மீது நம்பிக்கை வைத்து இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்த அனுமதித்த தேசிய மொழிபெயர்ப்புக் குழுவிற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்," என்கிறார் அவர்.

ஜப்பானிய, ஜெர்மன், பிரெஞ்சு, ஸ்பானிய மொழிகளின் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புகளை ஆங்கிலம் அல்லது சீனமொழியில் மொழிபெயர்க்கப் போட்டியாளர்களுக்கு இரண்டு வாரங்கள் கொடுக்கப்பட்டன. 1,200 வெள்ளிக்கும் அதிகமான மதிப்புள்ள பரிசுகளை அவர்கள் வெல்லலாம். இந்தப் போட்டி கிட்டத்தட்ட 200 பேரை ஈர்த்தது. அதனை விளம்பரப்படுத்த உதவிய கல்வி அமைச்சின் மொழி நிலையத்திற்கும் பல்வேறு பள்ளிகளுக்குமே எல்லாப் பாராட்டுகளும் உரித்தாகும்.

போட்டியாளர்களில் சிலர் தங்கள் நன்றியைத் தெரிவிக்க அணுகியபோது அவர் இன்ப அதிர்ச்சியுற்றார். "வகுப்பறைகளுக்கு வெளியே மொழிகளில் ஈடுபட இந்தப் போட்டி ஒரு காரணத்தை அளித்ததாகவும், அவற்றின் மீதான ஆர்வத்தை அதிகரித்ததாகவும் அவர்கள் என்னிடம் கூறினர்" என்று ஜிங்-யி கூறுகிறார்.

இந்த அபரிமிதமான ஆதரவு, மொழிகளைக் கற்கும்படி குறிப்பாக இளையர்களிடம் எடுத்துக்கூறுவதற்கு அவருக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது. "அடுத்த ஆண்டு போட்டியைத் தொடரலாம் என்று நினைக்கிறேன்," என்று கூறும் அவர் மீண்டும் தேசிய மொழிபெயர்ப்புக் குழுவுடன் இணைய நம்பிக்கை கொண்டுள்ளார்.

ஜிங்-யி ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்வதற்கான ஐந்து வழிகளைப் பகிர்ந்துகொள்கிறார்!

# வருங்காலத்தில் மொழிபெயர்ப்பு

கடந்த பத்தாண்டில் தேசிய மொழிபெயர்ப்புக் குழு பல்வேறு சமூகங்களுடன் ஒத்துழைத்து, தீர்வுகளைச் சேர்ந்து உருவாக்கியதன்மூலம் அரசாங்கத்திலும் தொழில்துறையிலும் மொழிபெயர்ப்பு ஆற்றல்களை மேம்படுத்தியுள்ளது. தொடர்ந்து தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும் வருங்காலத் திறனாளர்களை உருவாக்கியும், அவற்றின்வழி பண்பாட்டுப் புரிதலையும் தொடர்புகளையும் வளர்ப்போம்.

"தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் அடுத்தகட்டப் பணி, திறனாளர்களை உருவாக்கி ஒத்த சிந்தனையுடைய தனிநபர்களை ஒன்றுதிரட்டுவதன்வழி மொழிபெயர்ப்புச் சமூகத்திற்கு வளம் சேர்த்து வலுவூட்டுவதாகும். நாம் நமது வேலையை மேலும் சிறப்பாகவும் விரைவாகவும் செய்ய உதவியாகத் தொடர்ந்து தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவேண்டும். வருங்காலத்திற்குப் புதிய கண்ணோட்டத்தையும் வாய்ப்புகளையும் உருவாக்கவேண்டும்."

—

**டான் கியெட் ஹவ்**
தலைவர், தேசிய மொழிபெயர்ப்புக் குழு
மூத்த துணை அமைச்சர்,
தகவல், மின்னிலக்க மேம்பாட்டு அமைச்சு &
தேசிய வளர்ச்சி அமைச்சு



தேசிய மொழிபெயர்ப்புக்குழுவின் பணி, இருமொழி புலமை - இவற்றின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுங்கள்.

மூத்த துணை அமைச்சர் சீனமொழியில் தேர்ச்சி பெறுவதற்கு எவ்வாறு முயற்சி மேற்கொண்டார்; தொழில்நுட்பம் மொழிபெயர்ப்பாளர்களுக்கு எவ்வாறு கைகொடுக்கும் - தெரிந்துகொள்ளுங்கள்.

# தொழில்நுட்பத்தை அரவணைத்தல்

## ஆற்றல்களுக்கு மெருகேற்றி, செயல்திறனை மேம்படுத்துதல்

இயந்திர மொழிபெயர்ப்புகளின் துல்லிதமும் செயல்திறனும் அதிகரித்துவரும் வேளையில் வேலை நடைமுறையை நெறிப்படுத்தவும் மொழிபெயர்ப்புத் தரங்களை உயர்த்தவும் நாம் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோம். உதாரணத்திற்கு தொழில்சார் மொழிபெயர்ப்பாளர்கள் முதற்கட்ட மொழிபெயர்ப்பை உருவாக்க இயந்திர மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தலாம். அதன்மூலம் அவர்கள் மேலும் சிக்கலான, நுட்பமான பிழைதிருத்தப் பணிகளில் கவனம் செலுத்தமுடியும். இருப்பினும் உள்ளூர்ப் பண்பாட்டுச் சூழல் அடிப்படையில் – குறிப்பாக, பல்லின, பன்மொழிச் சிங்கப்பூரில் - மனித நிபுணத்துவம் தொடர்ந்து தேவைப்படும்.



“மொழியும் மொழிபெயர்ப்பும் இடம், பொருள் சார்ந்தது. செயற்கை நுண்ணறிவு இலக்கணத் துல்லிதத்தில் அதிக முன்னேற்றம் கண்டிருந்தாலும் அது மொழி பயன்படுத்தப்படும் சூழலையும் நோக்கத்தையும் துல்லிதமாகப் புலப்படுத்தவில்லை. ஒரு மொழிபெயர்ப்பு சரியா - தவறா என்பதை மனிதர்களே நிர்ணயிக்கின்றனர். அதனால் மொழிபெயர்ப்புச் சமூகம் நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு அச்சுறுத்தப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். மாறாக, செயற்கை நுண்ணறிவு சமூகம் பயனடைய மிகப் பெரும் வாய்ப்பை வழங்குகிறது.”

—

ஜோனஸ் ஃபைன் டான் வென் ஸி
குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர், மாணவர்

ஜொஹான் எவ்வாறு அவருடைய மகளையும் மொழிபெயர்ப்பில் ஈடுபடத் தூண்டினார் என்பதைக் கண்டறியுங்கள்.

## புதிய வேலைகளை உருவாக்குதல்

மொழிபெயர்ப்புத் தொழில்நுட்பம் உண்மையான வாழ்க்கைச் சூழல்களில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுவது பெரிய மொழி மாதிரிகளின் (Large Language Models - LLMs) திறன்மிக்க பயிற்சியை அதிகம் சார்ந்திருக்கிறது. மனிதர்கள் பயன்படுத்தும் மொழி நடையை இந்த இயந்திரங்களும் புரிந்துகொண்டு உருவாக்க மனித மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுவர். மின்னிலக்கவங்கிகள், மின்-விளையாட்டு நிறுவனங்கள் போன்ற வெவ்வேறு சந்தைகளில் செயல்படும் மின்னிலக்கச் சேவை வழங்குநர்களுக்கு அவற்றின் சேவையை உள்ளூர்ச் சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கவும் பயனீட்டாளருக்குச் சிறந்த அனுபவத்தை வழங்கவும் மனித மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுவர்.



“செயற்கை நுண்ணறிவானது மனித மொழிபெயர்ப்பாளர்களின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கிறது. உதாரணத்திற்கு நாங்கள் சில நேரங்களில் இனிப்புக் கலந்தாற்போல் சில சொற்களைக் கூறுவோம். நாங்கள் “budak bertuah” (அதிர்ஷ்டக்காரச் சிறுவன்) என்று கூறும்போது உள்ளபடியே அந்தச் சிறுவனைக் கண்டிக்கிறோம் என்பதைச் செயற்கை நுண்ணறிவால் புரிந்துகொள்ள இயலாது. நமது பணி அர்த்தமற்ற ஒன்றாக மாறி விடாது. சரியான பொருளை உள்ளபடி உணர்த்த, நம் கண்ணோட்டங்கள் முக்கியமானவை.”

—
ஜொஹான் அப்துல் ரஹ்மான்
குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்,
மலாய்மொழி ஆசிரியர்

# திறனாளர்களை ஊக்குவித்தல்

## இளையரிடையே ஆர்வத்தை வளர்த்தல்

இளையரிடையே மொழி, மொழிபெயர்ப்பு ஆர்வத்தை உருவாக்கி ஆழப்படுத்த, தேசிய மொழிபெயர்ப்புக் குழு அதன் பங்காளிகளுடன் இணைந்து தொடர்ந்து செயல்படும். அது வாழ்க்கைத்தொழிலுக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. Gen Z தலைமுறையினர் சமூக ஊடகத்தைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். நாங்கள் அதனைக் கொண்டு பாரம்பரியக் கற்றல் சூழலுக்கு அப்பாற்பட்ட நிலையில் அவர்களை ஈடுபடுத்துவோம். அதன்மூலம் தாய்மொழிகளின் கற்றலைக் கலகலப்பாகவும் ஈர்ப்புடையதாகவும் வைத்திருப்போம்.



“மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு வெறுமனே எழுதுவது மட்டுமல்ல. நீங்கள் பேசும் பல்வேறு மொழிகளின் விழுமியங்கள், உணர்பொருள் வழக்கங்கள் எனப் பலவற்றை அறிந்திருப்பீர்கள். ஒரு நபராக, அத்தகைய அறிவாற்றல் உங்களின் மதிப்பை உயர்த்திக் காட்டும்.”

—
**சித்தி அமிரா முகமது அமின்**
தகவல் சேவை (மொழிபெயர்ப்பு) கல்விமான்,
மூத்த நிர்வாகி (ஊடகத் தொடர்பு),
சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு

## இருமொழி, இரு கலாசார ஆற்றல்களை உருவாக்குதல்

இருமொழி அல்லது பன்மொழி அறிந்திருப்பது ஓர் ஆற்றல். வெவ்வேறு பண்பாடுகள், பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் திறன்களை வளர்த்துக்கொள்ள அது துணைபுரிகிறது. நாம் இருமொழித் திறன்களை வளர்த்து அடுத்த தலைமுறைக்கான இருமொழி, பன்மொழித் திறனாளர்களை உருவாக்குவோம். அவர்களுக்குப் பலதரப்பட்ட சமூகங்களிலும் வேலையிடங்களிலும் செயல்படத் தேவையான தொழில்நுட்பத் திறன்களும் பண்பாட்டு அறிவும் இருக்கும். அத்துடன் அவர்கள் உலகளாவிய பொருளியலில் தங்களின் போட்டித்திறனைத் தக்கவைத்துக்கொள்ளமுடியும்.



“சிங்கப்பூரில் மொழிபெயர்ப்பு, குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்கள் - இவற்றின் வருங்காலம் குறித்த எனது ஆசை, மேலும் இளையர்களை ஈடுபடுத்துவதாகும். ‘இப்போதைய இளையர்களுக்குச் சீனமொழி பற்றி எதுவும் தெரியாது, மேற்கத்திய மோகத்தில் மூழ்கிவிட்டனர்’ என்ற குறுகிய கண்ணோட்டத்தை நாம் கைவிடவேண்டும். இளையர்கள் முன்வரவேண்டும். ஆனால் அந்த எண்ணம் ஈடேறவேண்டும் எனில், மொழிபெயர்ப்புத் துறை மேலும் வசீகரமாக இருக்கவேண்டும்.”

—

எடி சுவா
குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்,
புத்தாக்கத் தயாரிப்பாளர்

# சமூகங்களை இணைத்தல்

## நமது இளைய தலைமுறைக்காக பண்பாடுகளைப் பேணிக் காத்தல்

பண்பாட்டு அறிவானது, மொழியில் ஆழப்பொதிந்திந்துள்ளது. இந்த அறிவுச்செல்வத்தைப் பெற, நம் இளையர்கள் தாய்மொழியில் புலமை பெற்றிருக்கவேண்டும். நாம் மொழிக் கற்பித்தலில் மொழிபெயர்ப்பை இணைக்கப் பங்காளி அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவோம். அதன்மூலம் நம் மாணவர்களின் இருமொழித் திறனும் அவர்கள்தம் சொந்தப் பண்பாடு பற்றிய புரிதலும் மேம்படும்.



"மொழிபெயர்ப்பின் முக்கிய நோக்கம் மக்களை இணைப்பது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வெவ்வேறு சமூகங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள அது உதவுகிறது. மனிதர்களை அதில் தொடர்ந்து ஈடுபடுத்துவது நாம் ஒருவர் மற்றவருடன் கலந்துரையாட மட்டுமல்லாமல் கலந்துறவாடவும் வகைசெய்கிறது. அது மிகவும் முக்கியம்."

—

கணார்தீபண் மதியழகு
குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்,
குடிபெயர்ந்த ஊழியர்கள் நிலையத்தில்
மூத்த நிபுணர்

கோவிந்தராசு எவ்வாறு சிறுவர் கதை ஒன்றை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தார் என்பதைப் பகிர்ந்துகொள்கிறார்.

## பண்பாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துதல்

மொழிபெயர்ப்பு நமது பல்வேறு சமூகங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளத் துணைபுரிகிறது. தொழில்நுட்பத்தின் உதவியுடன் - ஆங்கிலத்தை இடைத்தரகராகப் பயன்படுத்தாமல் – நாம் இலக்கியப் படைப்புகளை ஒரு தாய்மொழியிலிருந்து இன்னொன்றுக்கு மொழிபெயர்க்கலாம். அது மொழிபெயர்ப்பில் உள்ள தடைகளைத் தகர்த்தெறிந்து, பண்பாடுகளுக்கு இடையிலான தொடர்பையும் புரிதலையும் மேம்படுத்தும்.



"ஆங்கில இலக்கியத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் வளமான படைப்புகள் பல இருக்கின்றன. இந்தச் சிறப்புமிக்க படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்ப்பது நமது அறிவையும் புரிதலையும் விரிவுபடுத்துவதோடு இரு மொழிகள்மீது நாம் கொண்டுள்ள மதிப்பையும் ஆழப்படுத்துகிறது. மொழிபெயர்ப்பின்மூலம் தமிழின் அழகை வெளிப்படுத்தும்போது, அதன் தொடர் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் நம்மால் உறுதிசெய்யமுடியும்."

—

டாக்டர் மா. கோவிந்தராசு
குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர், தொழில்முனைவர்

தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் 10ஆம் ஆண்டு நிறைவுக்கொண்டாட்டத்தை நினைவுகூறும் வகையில், குடிமக்கள் மொழிபெயர்ப்பாளர்கள் சமூகமாக ஒன்றிணைந்து பாத்தேக் சித்திரம் உருவாக்கும் அமர்வு ஒன்றுக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு வண்ணங்களைக் கொண்டு, தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் பத்தாண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் சின்னத்தைச் சித்திரிக்கும் வகையில் பாத்தேக் ஓவியம் ஒன்றை தீட்டினர். முழுமைபெற்ற படைப்பானது, சிங்கப்பூரில் ஒட்டுமொத்த மொழிபெயர்ப்பு, மொழி ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவதற்கான தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் முயற்சிகளை ஆதரிப்பதில் சமூகத்தின் முக்கிய பங்கினைப் பறைசாற்றுகின்றது.



தேசிய மொழிபெயர்ப்புக் குழு அதன் பணிக்குக் கடந்த பத்தாண்டில் ஏதாவது ஒரு வகையில் பங்காற்றியுள்ள அனைத்துத் தனிநபர்களுக்கும் நன்றி சொல்ல விரும்புகிறது.

2014இல் தொடங்கப்பட்டது முதல் தேசிய மொழிபெயர்ப்புக் குழு பன்மொழிச் சிங்கப்பூரில் மொழிபெயர்ப்புத் தரத்தை உயர்த்த அரசாங்க, தனியார், மக்கள் துறைகளை ஒன்றிணைத்துள்ளது.

*‘சொற்சரம்: சமூகங்களை என்றென்றும் ஒன்றிணைக்கும் மொழிபெயர்ப்பு’* புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் தொழில்சார் மேம்பாட்டை ஆதரித்தும் அடுத்த தலைமுறைத் திறனாளர்களை உருவாக்கியும் மொழிபெயர்ப்புச் சமூகத்தை வளர்ப்பதற்கான இந்தப் பத்தாண்டுப் பயணத்தை விவரிக்கின்றது. இந்த முயற்சிகள், சிங்கப்பூரர்கள் நெருக்கடிக் காலங்களிலும் அவர்கள்தம் அன்றாட வாழ்க்கையிலும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வழிவகுப்பது மட்டுமின்றி, சிங்கப்பூரின் தனித்துவமான பல்லினப் பண்பாட்டு மரபுடைமையைப் போற்றிப் பேணுவதற்கும் துணைநின்றுள்ளன.

10th ANNIVERSARY
SG NATIONAL TRANSLATION COMMITTEE

MINISTRY OF DIGITAL DEVELOPMENT AND INFORMATION